# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**<u>ஆணை நாள். 08.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2648/F/2023</u>**

திரு.P.சுரேஷ் .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(மதுரை) லிமிடெட்,
தலைமை அலுவலகம்,
புறவழிச் சாலை, .. பொது அதிகார அமைப்பு
மதுரை-625 016.

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.P.சுரேஷ் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.T.சித்ராதேவி, உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 03.12.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 23.11.2022 அன்று TN-57 N 2343 எண் உள்ள பேருந்து காலை செட்அவுட் ஆன நேரம் மற்றும் செட்அவுட் செய்த ஓட்டுநர் மற்றும் நடத்துனரின் பெயர், பணி எண் பற்றிய விபரங்களை நகலாக வழங்குதல் என்பன போன்ற 9 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அதனைப்பெற்ற பொதுதகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 05.01.2023 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை.

இந்நிலையில் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 09.02.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (08.07.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 6(1)ன் கீழான மனுவிற்கு 11.09.2023 மற்றும் 26.06.2026 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் வழங்கியிருப்பதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் மனுதாரர் முழுமையான தகவல்களை பெற்றுக்கொண்டதாகவும் வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையாக உள்ளது என்றும் இவ்வழக்கில் மேல்நடவடிக்கையின்றி முடித்து தரும்படி ஆணையத்திற்கு கடிதம் அளித்துள்ளதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இவ்வாணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் மனுதாரரால் வழங்கப்பட்ட மனநிறைவு கடிதம் ஆகியவற்றை உறுதி செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2648/F/2023</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(மதுரை) லிமிடெட்,
தலைமை அலுவலகம்,
புறவழிச் சாலை,
மதுரை-625 016.

**<u>மனுதாரர்</u>**
திரு.P.சுரேஷ், த/பெ R.பாண்டி,
12-4-21-5, மீன்காரத் தெரு, 2,
வத்தலக்குண்டு-624 202,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

Copy to file: KR/PA